**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 40/2019

நாள் : 12.03.2026

பி.வா.சா.1 திரு.முகைதீன் அப்துல்காதர் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி ராம்ராஜ் என்ன வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு எங்கள் தரப்பில் பதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் பற்றி எனக்குத் தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து, மற்றும் அத்துடன் சேர்ந்த தெற்கு பகுதி மற்றும் மேற்குப்பகுதி சேர்த்து மொத்தம் 50 சென்ட் அளவுள்ள சொத்து என்றால் சரிதான். அந்த 50 சென்ட்டில் ஆக தெற்கு கடைசியில் 7 சென்ட்டில் தர்கா உள்ளது என்றால் 8 சென்ட்டில் தொழுகை பள்ளிவாசல் உள்ளது. மொத்த 50 சென்ட் உள்ள நிலம் முகமது அலி ஒலியுல்லா தர்ஹா என பெயர் விளங்கியது என்றால் சரிதான், அது எனது பாட்டனாரின் பெயர் ஆகும். முகமது அலி ஒலியுல்லா என்பவர் என் தகப்பனாரின் தாத்தா ஆவார். அவர் அந்த 50 சென்ட் நிலத்தையும் தர்ஹாவிற்காகவும் பள்ளிவாசலுக்காகவும் கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. அந்த இடத்தில்தான் முகமது அலி ஒலியுல்லாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டது என்றால் அவரது மனைவியும் அங்குதான் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். முகமது அலி ஒலியுல்லாவிற்கு எத்தனை மகன்கள் என்றால் ஒரு மகன்தான். அவர் பெயர் முகைதீன் அப்துல் காதர். முகைதீன் இப்ராகீம்சா என்பவர் யார் என்றால் அவர் முகமது அலி ஒலியுல்லாவின் பேரன் ஆவார். மேற்படி இப்ராகீம்சாவிற்கு எனது தகப்பனார்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:55:45 +0530

அம்ஜத் இப்ராகீம் சாகிபு, சாகுல் ஹமீது, முகமது யூசுப், சேகு அப்துல்காதர், அப்துல்ரகுமான், பாத்திமாபீவி, முகமது காசிம் ஆகியோர் மக்கள் ஆவார்கள் என்றால் சரிதான். முகமது காசிம் என்பவரின் மகள்தான் பாத்திமா கனி என்றால் சரிதான். அந்த பாத்திமா கனியின் மகனிடம் இருந்துதான் வாதியின் முன்சுவான்தார் தாவா சொத்தினை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி பாத்திமா கனி எனது மனைவி என்றால் எனது இரண்டாவது மனைவி. எங்கள் திருமணம் 1966 ல் நடந்தது. பால் ஆமினாபீவி என்பவர் எனது உடன்பிறந்த சகோதரி ஆவார்.

பால் ஆமினாபீவி முதன்முதலாக என் மீதும், பாத்திமா கனியின் தகப்பனாரான எனது சிறிய தகப்பனாரான முகமது காசீம் என்பவர் மீதும் அந்த 50 சென்ட் நிலம் சம்மந்தமாக பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு முகமது இப்ராகீம்சா–யின் மற்ற வாரிசுகள் மீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மீதும், என் சித்தப்பா மீதும் தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யும் போது, எனக்கும் பால் ஆமினாபீவிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி மொத்த சொத்தும் பள்ளிவாசலுக்கு கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி சொத்து பள்ளிவாசலுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதை முகமது காசிம் நிர்வகித்து வருவதாகவும், அதனால் அந்த சொத்தை பாகம் பிரிக்க முடியாது என்றும், முகமது இப்ராகீம்சாவின் வாரிசுகளை சேர்க்காததால் தாவாவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், முகமது காசிம் கட்சி செய்தார் என்றால் சரிதான்.

அந்த வழக்கில் பால் ஆமினாபீவி சாட்சியம் அளிக்கவில்லை என்றால் அவர் சுகம் இல்லாமல் இருந்தார். அந்த வழக்கில் 1ம் பிரதிவாதியாகிய நான், வாதி தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டேன் என்றால் சரிதான். அதே போன்று முகமது காசிம் என்பவரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:55:48 +0530

சரிதான். மொத்த சொத்தையும் நானும், பால் ஆமினாபீவியும் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக முகமது இப்ராகீம்சாவின் மற்ற வாரிசுகளை சேர்க்காமல் மேற்படி பால் ஆமினாபீவியும் நானும் கூட்டு சேர்ந்து மேற்படி வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பின் மேல் நானும், பால் ஆமினாபீவியும் சேர்ந்து மேல்முறையீடு தாக்கல் செய்தோம் என்றால் மேல்முறையீடு தாக்கல் செய்தோம். அந்த மேல்முறையீட்டில் எனக்கும், பால் அமீனாபீவிவிற்கும் மற்றும் எனது சிறிய தகப்பனார் முகமது காசீம் ஆகியோருக்கும் பாகம் உள்ளது என தீர்ப்பாகியது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை ஆட்சேபனை செய்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் முகமது காசீம் 2வது மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த 2வது மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது, முகமது காசீம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது 2வது மனைவி பாத்திமாகனி மேற்படி முகமது காசீம் வாரிசாக 2ம் மேல்முறையீட்டில் தரப்பினராக சேர்ந்து வழக்கை நடத்தினார் என்றால் நான்தான் அவரை வாரிசாக சேர்த்தேன். அந்த 2வது மேல்முறையீட்டில் மேற்படி பாத்திமாகனி, 1ம் அப்பீல் எதிர்மனுதாரரான எனது மனைவி என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த 2ம் மேல்முறையீடு வழக்கும் 2003ல் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி 2ம் மேல்முறையீடு வழக்கை நானும் பாத்திமாகனியும் மட்டும்தான் நடத்தினோம் என்றும், பால் ஆமினாபீவி அதில் கட்சி செய்யவில்லை என்று சொல்வதும் சரிதான்.

எனக்கும் எனது 2வது மனைவி பாத்திமாகனிக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் முகமது சேக், அப்துல்லா, முகமது இப்ராகீம், மீரான்பீவி ஆகியோர் பிறந்தார்கள். அந்த 2ம் மேல்முறையீடு தள்ளுபடி ஆவதற்கு முன்பாகவே, எனது மனைவி பாத்திமாகனி எனது மனைவி முகமது இப்ராகீம் என்பவருக்கு இனாம் சாசனம் 16.09.2002ல் எழுதிக்கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அந்த இனாம் சாசனத்தை வாதி இந்த வழக்கில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:55:51 +0530

தாக்கல் செய்துள்ளார், அதனை வாங்கி பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை.

அதன்பிறகு பஹாவுதீன் ஆலிம் மற்றும் நால்வர் சேர்ந்து மேற்படி 50 சென்ட் முழுவதும் செய்யது அலி ஒலியுள்ளா தர்ஹாவிற்கு பாத்தியப்பட்டது என்று இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் OS No. 17/2005 ல் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

அந்த 2ம் மேல்முறையீட்டில், எனக்கும், பாத்திமாகனிக்கும், பால்ஆமினாபீவிக்கும் பங்கு உள்ளது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். 2ம் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு, இறுதி நிலை தீர்ப்பாணை கோரி, நான் மனு தாக்கல் செய்யவில்லை, பால் ஆமினாபீவிதான் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் நானோ, பாத்திமாகனியோ ஆஜராகி கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். அந்த இறுதிநிலை தாக்கல் செய்வதற்கு முன்பாக அந்த சொத்து 3ம் தரப்பினர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தால், அந்த கிரையதாரர்களை இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பால்ஆமினாபீவி அவ்வாறு மேற்படி சொத்தை கிரையம் வாங்கிய நபர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, மேற்படி சொத்தை பார்வையிட்டு பள்ளிவாசல் உள்ள பகுதி தனியாக பிரித்து, மீதமுள்ள சொத்தை பால்ஆமீனாபீவி, பாத்திமாகனி மற்றும் எனக்கு பாகம் பிரித்து வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

அவ்வாறு நீதிமன்ற ஆணையர் அந்த சொத்தை பார்வையிட்டு அளந்தபோது எனக்கோ பாத்திமாகனிக்கோ அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த ஆணையர் அறிக்கையின்படி எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை நான் ஆட்சேபனை செய்யாமல் வாங்கிக்கொண்டேன் என்றால்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:55:54 +0530

சரிதான். எனக்கு ஒதுக்கிய சொத்தை நான் 2ம் பிரதிவாதி செய்யது ஆரிப் என்பவருக்கு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்தின் மதிப்பு ரூ.53,77,060/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். செய்யது ஆரிப் என்பவர் எனது தாத்தாவுடைய தம்பியின் பேரன் ஆவார். மேற்படி ஆவணத்தை பதியும் போது, இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்திற்குரிய முத்திரை தீர்வை மட்டுமே செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். செய்யது ஆரிப் என்பவர் எனது மகளோ, மகனோ இல்லாததாலும், நான் இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்திற்குரிய முத்திரை தீர்வை செலுத்தியது தவறு என்றும், அதனால் மேற்படி இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்திற்கான செலவுகள் அனைத்தையும் செய்யது ஆரிப் செய்தார் என்றால் சரிதான். செய்யது ஆரிப் என்பவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர் என்றால் இல்லை, அவர் நகை வியாபாரி. தாவா சொத்தானது பாத்திமா கனி பாகத்திற்குரிய சொத்து என்பதாலும், மேற்படி சொத்தில் பிரச்சனை இருப்பதாலும், செய்யது ஆரிப் எவ்வித கிரைய தொகையும் கொடுக்காமல், மேற்படி இனாம் ஆவணம் எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் செய்யது ஆரிப் ஆஜராகி வழக்கு நடத்தவில்லை என்றால் சரிதான்.

பொதுவாக, சொத்தை கிரையம் செய்வதற்கு முன்னர், அந்த சொத்திற்கு வில்லங்கம் ஏதேனும்உள்ளதா என்று வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்ப்பார்கள் என்றால் சரிதான். அது போன்று, இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும்போது, சொத்திற்கு வில்லங்கம் பார்த்தேன் என்றால் பார்க்கவில்லை. நான் வில்லங்கம் எடுத்து பார்க்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றும், வில்லங்கம் எடுத்து பார்த்தேன் என்றும், அதில் பாத்திமாகனி தன் மகனுக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரம்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:55:57 +0530

மற்றும் அவர் தேன்மொழி என்பவர் நீதிமன்றத்தின் மூலம் கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம், மற்றும் தேன்மொழியிடமிருந்து வாதி கிரையம் வாங்கிய பத்திரம் ஆகியவை காணப்பட்டன என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் செம்மண் குண்டு ரோடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் தென்வடல் நகராட்சி ரோடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் பாத்திமாகனியிடமிருந்து வெங்கடேசன் என்பவர் கிரையம் வாங்கிய சொத்து உள்ளது என்றால் சரிதான். முகமது இப்ராகீம் தாவா சொத்தை பொறுத்து தேன்மொழி என்பவருக்கு 05.02.2005 ல் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்குத் தெரியாது. அவ்வாறு கிரைய ஒப்பந்தம்படி, கிரையம் எழுதிக்கொடுக்கவில்லை என்பதால், மேற்படி தேன்மொழி முகமது இப்ராகீம் மீது வழக்கு போட்டார் என்றால் எனக்குத் தெரியாது. அந்த வழக்கு தீர்ப்பாகி அந்த தீர்ப்பின்படி, இராமநாதபுரம் சார்பு நீதிபதி முகமது இப்ராகீம் சார்பாக தேன்மொழிக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்குத் தெரியாது. அந்த கிரைய பத்திரத்தின்படி சொத்தின் அனுபவத்தை ஒப்படைக்க வேண்டும் என்று தேன்மொழி நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்து, நீதிமன்றம் மூலம் தாவா சொத்தை அனுபவம் எடுத்தார் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி தேன்மொழியிடமிருந்துதான் வாதி தாவா சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் வாதி ஸ்ரீ மதுரைவீரன் மூங்கில் டிப்போ என்ற பெயரில் கடை வைத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி விவரங்கள் அனைத்தும், பிராதில் சொல்லப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பாவது, இந்த விவரங்கள் சரியானவையா என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை.

நான், பால்ஆமினாபீவி மற்றும் எனது மனைவி பாத்திமாகனி



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:56:02 +0530

ஆகியோர் தாவா சொத்தினை பொறுத்து Collude ஆக தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அதனால்தான் அந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது, பாத்திமாகனியிடமிருந்து கிரையம் பெற்ற நபர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் இறுதி நிலை தீர்ப்பாணை தாக்கல் செய்து Collude ஆக இறுதி நிலை தீர்ப்பாணை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கையில் ஆதி உரிமையாளர் முகமது இப்ராகீம்சாவின் அனைத்து வாரிசுகளையும் சேர்க்காமல் பங்கு விகிதாச்சாரம் முறையாக குறிப்பிடாமல் பெற்றுள்ள தீர்ப்பு, பங்கு விகிதாச்சாரம் பொறுத்து செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு உரிமையாளரான பாத்திமாகனி மூலமாக வாதி கிரையம் வாங்கியுள்ளதால், அவருக்கு தாவா சொத்தின் முழு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனம் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் வாதியின் முன் சுவான்தாரர்கள் பெற்றுள்ளார்கள் என்றாலும், நான் தாவா சொத்தினை சட்டத்திற்கு புறம்பாக 01.02.2018 ல் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிக்கு உரிமையானது என்றும், அதனால் தாவா சொத்தை வாதி வசம் ஒப்படைக்கவேண்டும் என்றும் சொல்வது சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:56:05 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .